RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22s817

OPEN ACCESS

# ஜீவானந்தம் கவிதைகளில் பெண்ணியக் கருத்தியல்கள்

ஜோ. பென்னி [அ, *]

[அ] தமிழ்த்துறை, தெ.தி.இந்துக்கல்லூரி, நாகர்கோவில்-629002, தமிழ்நாடு, இந்தியா

# Feminist ideologies in Jeevanandham's Poems

J. Benny [a, *]

[a] Department of Tamil, S.T. Hindu College, Nagercoil–629002, Tamil Nadu, India

* Corresponding Author:
peppinbenz@gmail.com

Received: 30-05-2021
Revised: 30-04-2022
Accepted: 08-05-2022
Published: 20-07-2022

**ABSTRACT**

Women share the major responsibility in taking aspects of human race to the generation ahead. Though social and communal development of recent times have improved the stage of women in society, the culture indifferences and violence against women have not yet been eradicated from the society we reside in. The society have prolonged with a notion that men are strong and ought to be commanding and women are weak and to obey. Women are presumed and directed to be dependent to men while men boss them. We are still in the timeline where effects of women still have to be recognised through men. Despite of centuries of moral and cultural evolutions, the world of women is still being bounded and constructed by men. The male dominant society have always been against providing women education and wisdom, as they think those are not to be given for the women who is supposed to serve and obey the command men with no second thought. With the same principle, women's right to learn, speak and even rights on property all have been denied. Midst of such a deceived and biased society there rose the voices of number of great personalities, philosophers and social reformers who dreamt for and raised their voice for us to evolve into a society that respect women rights, gender equality and women freedom. Amongst, the great poet and philosopher well known for simplicity in his writings, who scripted several of his strong ideologies over women empowerment, is our MahakaviBharathiyar. Taking him as a role model, the NanjilNaatu poet and social reformer, Jeevanantham took the ideology of women rights further and planted it in the society with his narrow and well determined efforts. During his time, Jeevanantham witnessed women being dumbed and ruler over within the family and society, which he brought up to voices through several of his writings. With this research we are glad to pick, analyse and comprehend such writings of Jeevanantham and his ideologies on women and women empowerment.

**Keywords:** Feministic Ideology, Jeevanantham Poems, Tamil Literature, Women Education, Women Rights.

## முன்னுரை

நமது இந்திய சமுதாயத்தில் பெண் வீட்டிற்கு உரியவளாகவும், குழந்தைகளைப் பெற்று வளர்க்க வேண்டியவளாகவும், ஆண்களின் தேவைகளை நிறைவு செய்ய வேண்டியவளாகவுமே கருதப்பட்டாள். அறியாமை, மூடநம்பிக்கை, தீவிர சமய நம்பிக்கை, போன்றவை பெண்களை சுயசிந்தனை அற்றவர்களாக்கி தங்கள் உரிமையை உணர்ந்து கொள்ள மாட்டாதவர்களாக வைத்திருந்தது. தமிழகத்தின் பொற்காலமாக சுட்டப்படும் சங்ககாலத்தில் பெண்கள் கல்வி, வீரம், பண்பு ஆகியவற்றைப் பெற்று உயர்ந்த நிலையில் போற்றப்பட்டுள்ளனர். சங்கம் மருவிய காலத்திலும் பெண்களின் நிலை

சிறந்திருந்ததாகவே நீதி இலக்கியங்கள் கூறுகின்றன. ஆனால் பிந்தைய காலகட்டத்தில் ஆண்கள் பல பெண்களை மணந்ததால் பெண்களின் மதிப்பு குறையத் தொடங்கியது. ஒழுக்கத்திற்கான அளவுகோல்கள் பெண்களுக்கு மட்டுமானவையாகவும், மிகவும் கொடுமையானவையாகவும் மாறின. பெண்களின் வாழ்வு இழிநிலைக்குத் தள்ளப்பட்டது. பல நூற்றாண்டுகளாக தொடர்ந்த இந்த நிலை சமீப காலமாக மாற்றம் பெற்று ஆணுக்கு நிகராக பெண்ணும் எல்லா துறைகளிலும் சாதனை புரிந்து கொண்டிருக்கிறாள். இத்தகைய மாற்றத்திற்கு வழி வகுத்துக் கொடுத்த பெண்ணியப் போராளிகளின் வரிசையில் பெண்ணியம் பேசும் கவிதைகளால் தனக்கென்று தனி முத்திரை பதித்து நிற்பவர் தோழர் ஜீவானந்தம் அவர்கள். பெண்களின் உரிமை மற்றும் விடுதலை குறித்து ஜீவாவால் இயற்றப்பட்ட பாடல்கள் அவருடைய நண்பர் 'கிசென்'என்பவரால் ஒன்று திரட்டப்பட்டு 1933-ஆம் ஆண்டு 'பெண்ணுரிமை கீதங்கள்'என்ற பெயரில் வெளியிடப்பட்டன.

## ஆய்வு முறை

சமுதாய உணர்வும், சமுதாயப் பொறுப்பும் வாய்ந்த படைப்பாளியின் படைப்புகள் சமுதாயச் சிக்கல்களைக் காட்டுவதோடு அவற்றைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளையும் காட்ட வேண்டும் என்பதற்கு ஜீவாவின் படைப்புகள் ஒரு சான்றாகும். அந்தவகையில் அவருடைய கவிதைகளில் இடம்பெற்றுள்ள பெண்ணியம் சார்ந்த கருத்தாக்கங்களை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது. இவ்வாய்வு விளக்க முறை ஆய்வாகவும், ஒரு சில இடங்களில் ஒப்பீட்டு முறை ஆய்வாகவும் அமைந்துள்ளது.

## சமுதாயத்தில் பெண்கள்

சமுதாயம் என்பது பெண்களை உள்ளடக்கியது. பெண்களில்லாத சமுதாயம் முழுமை பெறாத சமுதாயமாகவே காட்சியளிக்கும். பெண்களால் வீடும், சமூகமும், நாடும், உலகும் முன்னேறுவது இன்றைய நிலை. அதற்காக பெண்கள் எத்தனையோ சவால்களையும், சிக்கல்களையும் இன்னமும் சந்தித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். பெண்மை என்பது அடக்கம், பொறுமை, தியாகம், இரக்கம், அழகு, தொண்டு, ஒப்புரவு முதலியன அமைந்த ஒன்று என்கிறார் (Kalyana Sundaranar, 2011). காலங்காலமாக இத்தகைய ஒரு வரையறைக்குள்ளேயே பெண்களை அடக்கி வைத்துள்ளது இச்சமூகம். பெண் என்பவள் ஆடவனைச் சார்ந்த ஒரு சார்புப் பொருள். அவள் இளமையில் தந்தையையும், திருமணத்திற்குப்பின் கணவனையும், முதுமையில் தன் மகனையும் சார்ந்து வாழ வேண்டியவளாகவே சமுதாயத்தில் காட்சிப்படுத்தப்படுகிறாள்.

பெண்ணறிவு என்பது பேதமைத்து என்ற உணர்வே அன்றைய சமுதாயத்தில் இருந்திருக்கிறது. எனவேதான் ஜீவாவும், புராதன சமூகத்தில் ஒரு பெண்ணில் நலம் எல்லோருடையதாகவும், எல்லோருக்கும் பொதுவான நன்மை ஒருவருடையதாகவும் கருதப்பட்டது. சமுதாய வளர்ச்சியில் குடும்பம் நடத்தும் பொறுப்பே பெண்களின் பெரும் பொறுப்பாக அன்று அமைந்திருந்தது. சமைத்து ஆண்களுக்கு அமுது ஊட்டும் பெருந்தொழில் பெண்களின் தனி உரிமையாகத் திகழ்ந்தது என்று குடும்பப் பொறுப்பைத் தவிர வேறெந்த உரிமைகளும் வழங்கப்படாத பெண்களின் அன்றைய சமூகநிலையினைத் தனது கடிதத்தில் சுட்டிக்காட்டுகிறார் (Arasu, 2007).

## பெண்ணடிமைத்தனம்

வருணாசிரம சாதி அமைப்பு தமிழகத்தில் வேரூன்றிய பின்னர் பெண்கள் சமஉரிமை இழந்து அடிமைகளாகவே நடத்தப்பட்டனர். பெண்களின் இல்லறக் கடமைகள் சமுதாய வளர்ச்சியின் மறைமுகப் பங்காகவே இருந்து வந்தது. வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைக்கும் சமுதாயமாகவே அன்றைய சமூகம் காட்சியளித்தது. கைதிகளை சிறையில் அடைத்து வைத்திருப்பது போல் கன்னிப் பெண்களை வீட்டில் பூட்டி வைத்தும், விலங்கினும் கீழாக அடிமைப்படுத்தியும் வைத்ததை கண்டு வெஞ்சினம் பொங்குவதாகக் கூறும் ஜீவா அதனை,

"காட்டுக்கரடி நகை

கைதிபோல் கன்னியரை

வீட்டிலே பூட்டி வைத்தார் - கிளியே

வெஞ்சினம் பொங்குதடி"

என்னும் கவிதை வழியாகப் பதிவு செய்கிறார் (Jeevanantham, 2012). பெண் என்பவள் அன்பு நிறைந்தவள், தியாகம் நிறைந்தவள் என்பன போன்ற சில தனி இலக்கண விலங்குகளை மாட்டி அதனின்று அவள் மீள முடியாத நிலையே அவளுக்குப் பெருமையெனப் பறைசாற்றி தெய்வமென்றும், சொர்க்கமென்றும் தூக்கி வைத்துப் புகழ்ந்து அவளது மனித உணர்வுகளை, மன வேதனைகளை உணர்ந்து கொள்ளாமல் அடிமைப்படுத்திய சமூகத்தை எதிர்த்து பெண் புதுவாழ்வு வாழ வேண்டும் என்று விரும்பிய ஜீவா,

"பித்தர் செய்த பெண்ணடிமை

இத்தரையிற் பொடி செய்வாய்"

என்று குரல் கொடுக்கிறார் (Jeevanantham, 2012). பெண்களுடைய இலட்சியம் வீட்டரசியாக இருப்பதென்று பறைசாற்றப்படுகிறது. இந்த வீட்டரசிக்கு அர்த்தம் குடும்பக் காரியங்களை திறம்பட நடத்தும் இலட்சணங்களுடையவளென்பது கூட அல்ல. துளிகூட சுயேச்சையின்றி எடுத்ததற்கும், கொடுத்ததற்கும் கீழ்படிந்து நடக்கும் அடிமையென்பது தான் என பெண்ணடிமைத்தனம் குறித்த கருத்துக்களை தனது கடிதத்திலும் பதிவு செய்திருக்கிறார் (Arasu, 2007).

## கொத்தடிமைகள்

தாய், தமக்கை, தங்கை, மனைவி, மகள் என்றெல்லாம் அழைக்கப்படுகின்ற பெண்கள் ஆண்களின் பார்வையில் கொத்தடிமைகளாகவே பல குடும்பங்களில் நடத்தப்படுகின்றனர். உயிர் என்றும், உடலின் ஒரு பாதி என்றும் இலக்கியங்களில் வருணிக்கப்படும் பெண்கள் குடும்ப வாழ்கையில் புகும்போது கூலிக் கொடுக்கப்படாத வேலைக்காரியாகவே பார்க்கப்படுகின்றனர். சொத்துரிமை இல்லாத பெண்களின் வாழ்வானது ஆண்களின் தலைமையைச் சார்ந்தே இருந்தது. சொத்துரிமை இல்லாது அடிமைப்பட்டு கிடக்கும் பெண்ணினத்தைப் பார்த்து,

"சொத்துஞ் சுகமுற்று, துயருறுகின்ற பாழும்

கொத்தடிமையொழிய - கிளியே

கூடியுழைப்பாரடி"

எனப் பாடி சொத்துரிமைக்குப் பெண்ணினம் கூடி உழைக்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்து அவர்களுக்கு வழிகாட்டுகிறார் (Jeevanantham, 2012). மேலும், பெண்ணாய் பிறப்பதிலும் மண்ணாய் பிறப்பது மேல், பெண்களை அடக்கி ஒடுக்க ஆண்கள் கையாடிய தில்லு முல்லு திருகுதாளம் ஆயிரமாயிரம்! அம்மம்மா! அவற்றை எண்ணமுடியா, ஏட்டிலடங்கா பெண்ணினத்தை சாஸ்வத அடிமைகளாகச் செய்வதற்காக ஆணினம் செய்து வந்திருக்கிற சதியாலோசனைகளும், ஆடி வந்திருக்கிற சுயநல திருவிளையாடல்களும் சொல்லும் தரத்தல்ல என்று பெண்கள் கொத்தடிமைகளாக ஆண்களிடம் படும் துயரை தனது கடிதத்தில் சுட்டிக்காட்டி வேதனையுறுகிறார். பாட்டாளி வர்க்கத்தின் உள்ளேயே பெண்மக்கள் ஆண் மக்களால் சுரண்டப்பட்டு அடக்கி, நசுக்கி, ஒடுக்கப்பட்டு அடிமைக்கு அடிமையாக கூலிக்கு கூலியாக நடத்தப்பட்டு வந்துள்ளனர் (Arasu, 2007).

## பெண் அவலம்

சமுதாயத்தில் பெண்களுக்கு இழைக்கப்படும் தீமைகள் கணக்கில் அடங்காதவையாகும். பிறப்பிலேயே உயர்வு, தாழ்வு கருதும் சாதி பாகுபாடு போலவே, பெண்பிறவி இழிவென்று கருதும் மனப்பான்மையும் வேரூன்றி உள்ளது. பெண்ணைத் தாழ்ந்த பிறவி, அறிவற்றவள் என்று இகழ்வோர்

வாயடங்கிட அவர்களது வாய்க்கொழுப்பை தூவென்று உமிழவும், அவர்கள் கன்னத்தில் அறை கொடுக்கவும் தயங்கக் கூடாது என்பதை ஜீவா,

"நாயென்றும் பேயென்றும்

நங்கையரைப் பழிப்போர்

வாயடங்கிட வாழ வேண்டும்

பாவிகள் பெண்களென்னும்

பாதகர் வாய்க்கொழுப்பை

தூ வென்றுமிழும் திறன் வேண்டும்

பெண்ணைக் கன்னா பின்னா வாய்ப்

பேசித் திரியும் வம்பர்

கன்னத்தோர் அறைவிழ வேண்டும்"

என்ற கவிதை வாயிலாக பதியமிட்டு பெண்களுக்குத் தைரியத்தையும் மனஉறுதியையும் ஊட்டுகிறார் (Jeevanantham, 2012). பெண்களின் இத்தகைய அவலநிலைக்கு அவர்களால் பேணிப்பாதுகாக்கப்படும் பழமையே காரணமென்பதை,

"வெட்டை நோயோடவர்தான் - கற்பு

வித்தார மாய்ப்பேசி வீம்படிக்கும் போது

பெட்டைக்கோழி போல - பெண்கள்

பீத்தல் பழமையைப் பேணிக் கொடுக்கிறார்"

என்ற வரிகளில் எடுத்துரைத்து, அத்தகைய பழமையை பெண்கள் கைவிட வேண்டுமென்றும் வேண்டுகோள் விடுக்கிறார் (Jeevanantham, 2012). பணக்கார வர்க்கமாயிருந்தாலும், பாட்டாளி வகுப்பாக இருந்தாலும் பெண்களை நோக்கிக்காட்டும் வெறுப்பிலிருந்து எதுவும் விடுபட்டதாயில்லை. ஒவ்வொரு வர்க்கமும் பெண்களை சமூகரீதியாக துன்பப்படுத்தவே செய்கின்றது. பெண்கள் தாழ்ந்தவர்கள் என்ற உணர்வு எல்லா வர்க்கத்தவரிடமும் வேரூன்றியே கிடக்கிறது.

## விலங்கு பூண்ட பெண்கள்

மெல்லியல் கோட்பாடும், கற்புக் கருத்தியலும் உழைக்கும் பெண்களை உதாசீனப்படுத்தும் அடித்தளங்களாக உள்ளன. வருணாசிரம தர்மத்தை விரித்துக் கொண்டு சமூகத்தைப் பாழ்படுத்திய தர்மவான்களின் அநீதியே பெண்களின் அவலநிலைக்குக் காரணமாகியது. பாதுகாப்பு என்ற பெயரில் விலங்காகவும் மாறியது. பெண்கள் சுதந்திரம் இல்லாமல் அடிமைத்தனத்துடன் வாழும் நிலையைக் கவிஞர் வைரமுத்து,

"பெண்களின் கைகளில்

வளையல்களோடு

விலங்குகளையும்

பூட்டியிருக்குமொரு

பொய்ச் சமூகத்தில்

ஆவேசக் கும்மி

அடிப்பதெப்படி"

என்று குறிப்பிடுகின்றார் (Vairamuthu, 2013). தோழர் ஜீவானந்தமோ விலங்கு பூண்ட பெண்களின் நிலையை,

"மாண்மிசை பெண்பிறப்பு - கிளியே

மண்பிறப் பாச்சுதடி!

ஆவேசமாய் எழுவோம்

அடிமை விலங்கடிப்போம்"

எனக் கூறி அடிமையாகிய விலங்கை ஒடித்துப் பெண்கள் முன்னேற வழிவகுத்துக் கொடுக்கிறார் (Jeevanantham, 2012).

## பெண்ணொரு ஜடம்

பெண்ணை ஒரு பதுமையாக, எந்திரமாக முற்றிலும் ஆணைச் சார்ந்த, அதிகம் சிந்திக்க, செயல்பட, சம்பாதிக்கத் தேவையில்லாத ஒரு ஜடப் பொருளாக நடத்தும் போக்கையே சமுதாயத்தின் பல இடங்களில் காணமுடிகிறது. பெண்ணைத் தம்மைப்போல் வாழப் பிறந்தவள் என்று எண்ணாமல் ஒரு ஜடப்பொருளாக கருதும் சமுதாய நிலையை ஜீவா,

"தட்டு முட்டுச் சாமான்போல்

தையலரைப் பாவிக்கும்

முட்டாள் தனமகல வேண்டும்"

எனப் பாடுகிறார் (Jeevanantham, 2012). பல பெண்கள் தங்கள் வாழ்க்கையில் ஏற்படுகின்ற அவமதிப்புகளை 'இது என் விதி'அனுபவித்து தான் ஆக வேண்டும் என்ற எண்ணத்துடனே, அன்றும் வாழ்ந்து வந்தனர். இன்றும் வாழ்ந்து வருகின்றனர். பெண்ணின் இத்தகைய மனநிலையை மாற்ற நினைத்த ஜீவா அவர்கள்,

"கோழை உலகை வதைக்கும்

கோடிய விதியைச் சுடுவாய்"

என்ற கவிதை வரிகள் வழியாக அதனை சுட்டிக்காட்டுகிறார் (Jeevanantham, 2012). அதுமட்டுமல்லாமல் தன் விதியை எண்ணி வேதனைப்படும்பெண்ணின் நிலையை,

"கூண்டி லடைப்பட்ட

கூவும் தொல்லை

கொள்ளை கொள்ளை

வேண்டி வந்தவர் மீதென்று

வெம்பி வேகிறாள் - பாழும்

விதியை நோகிறாள்"

என்ற வரிகளில் படம்பிடித்துக் காட்டுவதையும் காணலாம் (Jeevanantham, 2012).

## கைம்பெண்களின் நிலை

கணவனை இழந்த பெண்ணுக்குச் சமுதாயம் வலியுறுத்திய ஒருவித வாழ்க்கை முறையே விதவை வாழ்வு. கணவனை இழந்த பெண் பல்வேறு பாதிப்புகளுக்கு உள்ளாகி துன்புறுகின்றாள். இன்றைய காலகட்டத்தில் கணவனை இழந்த பெண் மறுமணம் செய்வதென்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட

ஒன்றாக இருந்தாலும், அக்கால சமுதாயத்தில் விதவைகளின் வாழ்வு மற்ற பெண்கள், சூத்திரர், அடிமைகள் ஆகியோர்களின் நிலையை விடவும் மிகவும் தாழ்வான, இழிவான நிலையிலேயே இருந்து வந்தது. சமுதாயத்தில் பிற பெண்களுக்கு இருக்கின்ற உரிமைகள் தேவைகள் விதவைகளுக்கு மறுக்கப்பட்டு தலையில் பூ வைக்கக் கூடாது, நெற்றியில் பொட்டு வைக்கக்கூடாது என பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்ததை கவிஞர் கம்பதாசன்,

"இந்திய கைம்பெண் இனத்தில் மட்டும்

என்னை அவமானம் செய்து விட்டார்"

என முல்லைப்பூ கூறுவதாக உருவகித்துப் பாடியுள்ளார் (Kambadhasan, 1941). இதனை ஜீவாவும்,

"விதவைகளை அழவைத்து ஆண்மக்கள்

ஆக்கிரமம் செய்ததாலும்

அஞ்சிக் கிடந்தபேர் மிஞ்சித் தவித்தார்கள்"

என்று ஆண்மக்கள் தங்கள் அதிகாரத்தாலும், அக்கிரமத்தாலும் விதவைகளை வாழவிடாமல் அழவைக்கின்றனர் என்கிறார் (Jeevanantham, 2012).

கற்கண்டு போன்று இனிக்கும் பெண் கணவனை இழந்தால் வேப்பங்காயாய் சமூகத்தில் கசந்து போகும் தன்மையினை,

"கற்கண்டு போன்ற பெண் கணவனை இழந்தால்

கசந்த பெண் ஆவது விந்தைதான் புவிமேல"

என்று பாடி விதவைக் கொடுமைகளை நிந்திக்கிறார் புரட்சிக்கவி பாரதிதாசன் அவர்கள். தோழர் ஜீவாவும் புதுமைப் பெண்ணுக்கு எழுதிய கடிதங்களில் கணவனோடு மனைவி உலகை நீத்துவிட வேண்டும் (Bharathidasan, 1971). அப்படிச் சாகாமல் உலகில் வாழ்ந்தால் அவள் மனித வாழ்வை இழந்து சாகாமல் சாக வேண்டும். இது தொல்காப்பியமும், சங்க இலக்கியங்களும் கூறும் பண்டைய தமிழர் மரபு (Jeevanantham, 2012). என்றும், புறநானூறு பண்டைக் காலத்தில் கைம்மை நோன்பு பூண்ட பெண்கள் கூந்தலை நீக்கிக் கொண்டார்கள் என்பதையும், அணிகலன்களைக் களைந்து கொண்டார்கள் என்பதையும் காட்டுகிறது என்றும் கைம்பெண்கள் சமுதாயத்தில் அடைந்த துன்பநிலையைச் சுட்டிக்காட்டுகிறார் (Arasu, 2007).

## பெண்கல்வி

நமது சமூக அமைப்பு பெண்கல்வியை ஊக்குவிக்கவில்லை. பெண்கள் வீட்டை ஆள வேண்டும், ஆண்கள் நாட்டை ஆள வேண்டும் என பிரித்து வைத்திருந்தது. எனவே பெண் என்பவள் வீட்டு வேலைகளைச் செய்து குழந்தைகளையும், கணவனையும் கவனிப்பவராக மாறிப் போயினர். வீட்டை ஆளும் பெண்களுக்கு கல்வி தேவையில்லை என்பது ஆணாதிக்க மனநிலையாய் இருந்தது. குடும்பத்தின் பொறுப்புகளைச் சுமக்கின்ற பெண்கள் வேர்களைப் போன்றவர்கள். வேர்கள் வலுவாக இருக்கும் போது தான் மரம் செழுமையாக இருக்க முடியும். பெண்கல்வி அந்த வேர்களைப் பலப்படுத்தும். எனவேதான் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்,

"புலன் அற்ற பேதையாயப் பெண்ணைச் செய்தால்அந்

நிலம் விளைந்த பைங்கூழ் நிலையையும் அம்மட்டே"

என பெண்கல்வியின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறார் (Bharathidasan, 1971). அவ்வாறே ஆணுக்கு நிகராக பெண்ணும் கல்வி கற்க வேண்டுமென விரும்பிய ஜீவா,

"கொஞ்சம் சுகபோக ஞானக்

குளிர் தருவைத்தான் நடுவாய்"

என்ற தனது கவிதையின் வாயிலாக பெண்கள் உலகத்தை வதைக்கும் கொடியவர்களை எதிர்க்க அவர்களுக்கு கல்வி ஞானம் வேண்டுமென்று வலியுறுத்துகிறார் (Jeevanantham, 2012).

சங்ககாலச் சமூகத்தில் தலைவன், தலைவி இருவரும் ஒத்த அன்பும், பண்பும், செல்வமும், ஒத்த கல்வியும் உடையவராக இருந்த செய்தியினை இறையனார் அகப்பொருள் உரையில் நக்கீரனார் எடுத்துக் கூறியுள்ளார். இதிலிருந்து அக்காலத்தில் கல்வி பயில்வதில் ஆணுக்கும் பெண்ணுக்கும் சம உரிமையும், சம வாய்ப்பும் இருந்ததை அறிய முடிகிறது. உலக நிகழ்வுகளைக் காணவேண்டுமென்றால் கண்கள் வேண்டும். அக்கண்கள் ஆணுக்கும் தேவை, பெண்ணுக்கும் தேவை. அதுபோன்று கல்விக்கண் என்பதும் ஆணைப் போல் பெண்ணுக்கும் இன்றியமையாத ஒன்றாகும். உலகில் ஆண் பிறக்கும் போது தேன் மாரியும், பெண் பிறக்கும் போது மண் மாரியும் பொழிவதில்லை. அறிவுப்பசி என்பதும் ஆண், பெண் இருவருக்கும் பொதுவானதே. ஆனால் பெண்கள் இவற்றை உணர்ந்து கொள்ளாமல் அடுப்படி பூனைகளாகி நிற்பது காலங்காலமாக உள்ள பழக்கமாக மாறிவிட்டது. அடுப்பூதி பிழைப்பதே அவர்கள் வாங்கி வந்த வரம் போன்று நினைத்து வாழ்ந்தும் வருகின்றனர். பெண்கள் வாசற்படியை தாண்டக் கூடாது என்பது இடைப்பட்ட காலத்தில் ஆணாதிக்க வர்க்கத்தினால் உருவாக்கப்பட்ட சமூக சட்டமாக இருந்த காரணத்தினால் பெண்கள் கல்வியிலும், வாழ்க்கைத் தரத்திலும் பின்தங்கியிருந்த நிலையினை ஜீவா தனது கடிதங்களிலும் பதிவு செய்துள்ளார்.

## உரிமைகள் மறுக்கப்படல்

நமது பண்டைய தமிழ்ச் சமூகத்தில் பெண்கள் வீரத்திலும், கல்வியிலும், பிற கலைகளிலும் சிறந்தவர்களாக இருந்ததை அக்கால இலக்கியங்கள் சித்தரிக்கின்றன. ஆனால் வேதகாலத்திற்குப் பிந்தைய காலகட்டம் முதல் சமுதாய மாற்றத்தினால் பரம்பரை பரம்பரையாகப் பெண்களின் உரிமைகள் பறிக்கப்பட்டு, அடக்கி ஆளப்பட்டே வந்துள்ளன. பெண்களுக்கு பேச்சுரிமை, சொத்துரிமை, வீட்டை விட்டு வெளியே செல்வதற்கான உரிமைகள் மறுக்கப்பட்டு வந்த நிலையினை ஜீவா,

"உலகம் முழுவதும் சுற்றும்

உரிமை யாடவர்க் குண்டாம்

விலகி யொழிப்பதுவே - கிளியே

மெல்லியலார் முறையாம்

பெண்களுக் கொன்றுமில்லை

பேச உரிமையில்லை"

என்று சுட்டிக்காட்டுகிறார் (Jeevanantham, 2012). பெண்களின் உரிமைக்கும் உணர்வுக்குமிடையே கற்பு என்பது பெரும் தடையாகவே இருக்கின்றது. கற்புக்காக மனத்துள் தோன்றும் உண்மை அன்பை, காதலை மறைத்துக் கொண்டு காதலும், அன்பும் இல்லாதவருடன் இருக்க வேண்டும் என்கிற சமூகக் கொடுமையும் அழிய வேண்டும் என்ற பெரியாரின் கூற்று கற்பை விட அன்பே பெரிது என்பதை உறுதிப்படுத்துகின்றது. ஆனால் நமது ஆணாதிக்கச் சமூகம் பெண்கள் பிற ஆடவரிடம் பேசினாலே அவளது தெய்வக் கற்பு போய்விடும் என்ற பிம்பத்தை உருவாக்கி, பெண்களை மிரட்டி அவர்களது உரிமைகளைப் பறித்து தமது அடிமைகளாக வைத்து ஆதிக்கம் செய்து கொண்டிருக்கிறது. இத்தகைய ஆணவப் போக்கைக் கண்டு உள்ளம் குமுறிய ஜீவா அதனை,

"பேசிடில் தெய்வக் கற்பு

பிசகுமென்றே மிரட்டி

தோஷங்களாய் ஆடவர் - கிளியே

தோகையரைப் பழித்தார்"

என்ற வரிகள் மூலம் பிரதிபலிக்கிறார் (Jeevanantham, 2012). மேலும்,

“கற்பென்று பூச்சி காட்டும்

கழுதைகளை நிந்தனை செய்

கட்டற்று சிட்டு போற்

களித்திடவே சிந்தனை செய்”

என்று எதிர்கால பெண்கள் வாழவேண்டிய நிலை குறித்தும் விளக்குகிறார் (Jeevanantham, 2012). பெண்கள் கட்டுப்பாடற்று, சிட்டுக்களைப் போல் மகிழ்ந்திருக்க வேண்டுமென்றும், கற்பு சமுதாய நெறிமுறையிலிருந்து அறவே ஒழிக்கப்பட வேண்டுமென்றும் குரல் கொடுக்கக்கூடியவராக விளங்கினார் ஜீவா.

## பெண்கள் உரிமைப் போராட்டம்

சமுதாயத்தில் பெண்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை எதிர்த்துப் பிற்காலத்தில் பலர் பேச ஆரம்பித்தனர். தமிழகத்தில் 19-ம் நூற்றாண்டில் இராமலிங்க வள்ளலார் தோற்றுவித்த ‘சுத்த சமரச சன்மார்க்க சங்கம்’ஆண்களைப் போலவே பெண்களும் எல்லாத்துறையிலும் சமமாக முன்னேற வேண்டும் என்ற கொள்கையை செயல்படுத்தியது. இராஜாராம் மோகன்ராய், பெரியார், அன்னிபெசன்ட் அம்மையார் போன்றோரும் பெண்ணுரிமைக்கு குரல் எழுப்பினர். பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களும் ஒரு நாட்டின் பண்பாடு பெண்கள் முன்னேற்றத்தில் தான் அடங்கி இருக்கிறது, பெண்கள் பிற்பட்டவர்களாக இருக்கும் வரையிலும் எந்தவொரு நாடும் முன்னேற முடியாது, பள்ளியிலும் கல்லூரியிலும் படிக்கும் போது அவள் அஞ்சாமையும் தன்னம்பிக்கையும் வளர்த்துக் கொள்ள வேண்டுமென்று 24.01.1954ல் நடந்த அனைத்திந்திய மகளிர் மாநாட்டில் பேசினார்.

ஏகாதிபத்திய எதிர்ப்பு போராட்டமும், தொழிலாளர் வர்க்கப் போராட்டமும், சமதர்ம கொள்கைப் போராட்டமும் வலுபெற்று பரந்த அளவில் வளர்ச்சியடைவதற்கு பெண் அடிமைப்பட்டு கிடக்கும் இழிநிலையை ஒழியச் செய்ய வேண்டும் என்ற நோக்கம் கொண்டவராக இருந்தவர் ஜீவா. அதனால் தான்,

“உடனடிமை யொழிய வேண்டும் - பெண்கள்

உரிமை யடைய வேண்டும்

வேறென்ன வேண்டும்

மடையர் பழமை மாய வேண்டும் - அதற்குரிய

மார்க்கம் புதுமை பெற வேண்டும்

வேறென்ன வேண்டும்”

என்று பழைய சமுதாயத்தின் பெண்ணைப் பற்றிய மதிப்பீடுகளை, ஏளன உணர்ச்சிகளைக் கிள்ளி எறிய வேண்டுமென்று காரசாரமாக குரல் கொடுக்கிறார் (Jeevanantham, 2012).

“பெண்ணுக்கு விடுதலை

நீர் இல்லை யென்றால்

பின் இந்த உலகினிலே

வாழ்க்கை யில்லை”

என்று பெண் விடுதலையின் அவசியத்தை உணர்த்திய பாரதியின் வழிநின்று ஜீவாவும்,

“வெந்த போதும் நொந்தபோதும்

வீறிட்டெழும் ரோஷம் வேண்டும்

பாதகத்தை அம்பு போலப்

பாய்ந்தடிக்கும் தன்மை வேண்டும்

பச்சை நாலி வைதீகத்தைப்

பாழ்படுத்தும் வண்மை வேண்டும்"

என்ற பாடல் வழியாக பெண்கள் தங்களுக்கெதிரான அடிமைத்தனத்தையும், வைதீகத்தையும் எதிர்த்துப் போராட வேண்டுமென்றும் ஊக்கப்படுத்துகிறார் (Jeevanantham, 2012).

## முடிவுரை

ஆணும், பெண்ணும் வாழ்வின் இரு கண்கள் போன்றவர்கள். பெண்ணின் பெருமையை ஆணும் உணர்ந்து கொண்டால் தான் வாழ்வில் உயர்வடைய முடியும். மனிதன் அறிவியலில் விண்ணைத் தொட்டாலும், ஒரு உயிரைக் கருவறையில் தாங்கி உலகிற்கு தருபவள் பெண்தான். குடும்பத்தை முன்னேற்றுவதிலும், குழந்தைகளின் எதிர்காலத்தை சரியான தொலைநோக்கோடு கொண்டு செல்வதிலும் பெண்களின் பங்கு அளப்பறியதாகும். சொல்லப்போனால் ஒரு தேசத்தையே கட்டிக்காக்கும் வலிமையுடையவளாக விளங்குபவள் பெண். இத்தகைய பெருமைமிக்க பெண்மக்களைத் தாழ்த்தி முன்னேற விரும்பும் சமூகம் சிறகிழந்த பறவை போல பரிதாபமான நிலையைத்தான் அடையும். ஆணும், பெண்ணும் கட்டுகளின்றி சுயேச்சையாக, சரிநிகர் சமானமாக வாழும் சமுதாயம் தான் பூரணமான நாகரிகமடைந்த சமுதாயமாகும் என்பது பெண் முன்னேற்றம் காண விரும்பிய தோழர் ஜீவானந்தம் அவர்களின் கருத்தாகும்.

## References

Arasu, V., (2007) Jeevanantham Aakkangal, New Century Book House, Chennai, India.

Bharahdasan, (1971) Bharathidasan Kavithaigal, Chentamizh Nilayam, Trichy, India.

Jeevanantham, P., (2012) Jeevavin Paadalgal, New Century Book House, Chennai, India.

Kalyana Sundaranar, T.V., (2011) Pennin Perumai, Paari Nilayam, Chennai, India.

Kambadhasan, (1941) Kanavu Muthaliya Kavigal, Aasiriyar Veliyeedu, Chennai, India.

Vairamuthu, R., (2013) Thiruthi Ezhuthiya Theerppugal, Surya Literature Plt, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License